செ.வெ.எண்:33 /ஏப்ரல் நாள்:28.04.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் செயல்படும் செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் பயோனியர் செவிலியர் பயிற்சி பள்ளி ஆகியவை மட்டுமே செவிலியர் மற்றும் துணை மருத்துவ படிப்புகள் பயிற்றுவிக்க அங்கீகரிக்கப்பட்டவை.**

**மருத்துவ பணிகளின் இணை இயக்குநர் மரு.சகாயஸ்டீபன் ராஜ் அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு செவிலியர் பதிவு மையம் சென்னை, இந்திய நர்சிங் கவுன்சில் (டெல்லி), எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்பநல செயலகம் அனுமதியைப் பெற்றுள்ள

1. இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் செயல்படும் செவிலியர் பயிற்சி பள்ளி
2. பயோனியர் செவிலியர் பயிற்சி பள்ளி, மதுரை ரோடு, இராமநாதபுரம்

ஆகியவை மட்டுமே இராமநாதபுரம் மாவட்டத்தில் செவிலியர் மற்றும் துணை மருத்துவ படிப்புகள் பயிற்றுவிக்க அங்கீகரிக்கப்பட்டவை.

இந்த இரு மருத்துவ கல்வி நிறுவனங்கள் தவிர்த்து ஏனைய மருத்துவ, துணை மருத்துவ மற்றும் சுகாதார கல்வி நிறுவனங்கள் அனைத்தும் அரசு அங்கீகாரம் இல்லாதவை என்று அறிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் இது குறித்து கவனமுடன் இருக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மருத்துவ பணிகளின் இணை இயக்குநர் மரு.சகாயஸ்டீபன் ராஜ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**